


திருவாரூர் மாவட்ட நன்னிலம் ஒன்றியம் பூந்தோட்டத்தில் நடைபெற்ற இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வில் மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்றார். உடன் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் தாஜ்தீன், ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், ப.பிரபாகரன், வே.மனோகரன், கோ. தெட்சிணாமூர்த்தி, பேரூர் செயலாளர் தியாகு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



ஈரோடு தெற்கு மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிசாமி இல்ல திருமண வரவேற்பு விழாவில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி, செய்தி துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், உள்ளிட்ட மாநில , மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், ஆன்றோர் சான்றோர்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

### அரியலூர் மாவட்டத்தில்

# 26 புறநகர் பேருந்துகள் தடம் நீட்டிப்பு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், மார்ச் 19-

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் (லிட்) திருச்சி மண்டலத்தின் சார்பில் அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் நகராட்சியில் 14 பேருந்துகள், செந்துறை ஊராட்சியில் 5 பேருந்துகள் மற்றும் அரியலூர் நகராட்சியில் 7 பேருந்துகள் என மொத்தம் 26 புறநகர் மற்றும் நகரப் பேருந்துகள் தடமாற்றம் மற்றும் தட நீட்டிப்பு செய்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

26 பேருந்துகள் தடமாற்றம் மற்றும் தட நீட்டிப்பு செய்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன்படி அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தில், ஜெயங்கொண்டம் கிளை புறநகர் பேருந்து தடம் எண்.586 ஜெயங்கொண்டம் கும்பகோணம், நகரப்பேருந்து தடம் எண்.013A ஜெயங்கொண்டம் அணைக்கரை, நகரப் பேருந்து தடம் எண்.001E ஜெயங்கொண்டம் காட்டுமன்னார்குடி, புறநகரப் பேருந்து தடம் எண்.509I சென்னை விக்கிரமங்கலம், புறநகரப் பேருந்து தடம் எண்.611C ஜெயங்கொண்டம் புதுக்குடி, புறநகரப் பேருந்து தடம் எண்.624E ஜெயங்கொண்டம் பிலாக்குறிச்சி, புறநகரப் பேருந்து தடம் எண்.626A ஜெயங்கொண்டம் கோட்டைக்காடு, நகரப் பேருந்து தடம் எண்.010A ஜெயங்கொண்டம் ஆனந்தவாடி, நகரப் பேருந்து தடம் எண்.011A ஜெயங்கொண்டம் ஆதனக்குறிச்சி, புறநகரப் பேருந்து தடம் எண்.625E ஜெயங்கொண்டம் வேப்பூர், புறநகரப் பேருந்து தடம் எண்.531I அரியலூர் ஜெயங்கொண்டம் புறநகரப் பேருந்து தடம் எண்.628A இரும்புலிக்குறிச்சி மயிலாடுதுறை, விழுப்புரம் கிளை நகரப் பேருந்து காட்டுமன்னார்குடி முட்டம், நகரப் பேருந்து காட்டுமன்னார்குடி அணைக்கரை ஆகிய 14 பேருந்துகளை தடமாற்றம் மற்றும் தடநீட்டிப்பு செய்து துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து செந்துறை பேருந்து நிலை யத்திலிருந்து விழுப்புரம் கிளை நகரப் பேருந்து பெண்ணடம் செந்துறை, நகரப் பேருந்து திட்டக்குடி செந்துறை, நகரப் பேருந்து செந்துறை விருத்தாச்சலம், நகரப் பேருந்து விருத்தாச்சலம் ஆர்.எஸ்.மாத்தூர், அரியலூர் கிளை பேருந்து வாளரக்குறிச்சி சவுரிகாடு ஆகிய 5 பேருந்துகள் தடமாற்றம் மற்றும் தடநீட்டிப்பு செய்து துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், அரியலூர் பேருந்து நிலையத்தில் நகரப் பேருந்து அரியலூர் ஓரியூர், நகரப்பேருந்து அரியலூர் நாகல்குழி, நகரப்பேருந்து அரியலூர் இரும்புலிக்குறிச்சி, நகரப்பேருந்து அரியலூர் புதுக்குடிசை, புற நகரப்பேருந்து தஞ்சாவூர் கொளத்தூர், புறநகரப் பேருந்து திருவையாறு காமரசவல்லி, நகரப்பேருந்து திருமானூர் கோவிலூர் ஆகிய 7 பேருந்துகள் தடமாற்றம் மற்றும் தடநீட்டிப்பு செய்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பிரேமி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் மனோகரன், கோட்ட மேலாளர் ராம்குமார், வட்டாட்சியர்கள் ஆனந்தன் (ஜெயங்கொண்டம்) கோவிந்தராஜ் (செந்துறை), அரியலூர் நகராட்சி ஆணையர் அசோக்குமார், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா.மணிமாறன், ஆர்.கலியபெருமாள், இரா. அண்ணாதுரை, நா.கணேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், தொமுச மண்டல தலைவர் டி.சேகர், அரியலூர் தொமுச செயலாளர் பி.வி.அன்கழகன், தொமுச நிர்வாகிகள் கொளஞ்சி, செல்வம், சுப்ரமணியன், குமார், கருணாநிதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள்

இதர அரசு அலுவலர்கள் மற்றும் போக்குவரத்து கழக பணியாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ‘ஞான பாரதம்’ திட்டத்தில் தமிழ்நாடும் தமிழ்மொழியும் தொடர்ந்து புறக்கணிப்பு!

## ஒன்றிய அரசின் ஒடுக்குமுறைச் செயலுக்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. கடும் கண்டனம்!

புதுடெல்லி, மார்ச். 19-

இந்தியாவின் பழங்கால கையெழுத்துப் பிரதிகளான ஓலைச்சுவடிகள் மற்றும் காகிதச்சுவடிகளைப் பாதுகாக்கவும், அவற்றை டிஜிட்டல்மயப்படுத்தவும் ஒன்றிய அரசு கொண்டு வந்த ‘ஞான பாரதம்’ திட்டம் குறித்து, நாடாளுமன்றத்தில் ஒன்றிய கலாச்சார அமைச்சகத்திடம் கேள்வி ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.



இதற்கு கிடைத்துள்ள பதில்கள் மற்றும் அதைத் தொடர்ந்த ஆய்வுகளில் இருந்து, இந்த திட்டத்தில் தமிழ்நாடும், தமிழ்மொழியும் புறக்கணிக்கப்படுவது அம்பலமாகியுள்ளது. நமது வாக்குகளுக்காக திருக்குறள் ஒப்பித்து நாடகமாடும் தரப்பினர், பின்வாசலில் செய்யும் நடவடிக்கைகள் எல்லாமே தமிழ்நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் இழைக்கும் துரோகமாகவே இருக்கிறது.

**1. ‘ஞான பாரதம்’ இணையதளத்தில் தமிழ்ச்சுவடிகள் எங்கே?**

இந்த திட்டத்தை ஆரம்பிக்கும் போது, இந்தியா முழுவதும் ஒரு கோடிக்கும் அதிகமான சுவடிகளைப் பாதுகாக்கப் போவதாகவும், அவற்றை டிஜிட்டல்மயப்படுத்தப் போவதாகவும் ஒன்றிய அரசு அறிவித்தது. மேலும், அறியவரப்படாத சுவடிகளை கண்டெடுக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தது.

ஆனால், ‘ஞான பாரதம்’ திட்டத்தின் அதிகாரப் பூர்வ WWW.GYANBHARATAM.COM இணையதளத்தில் இதுவரை பதிவேற்றப்பட்டுள்ள 1 லட்சத்திற்கும் அதிகமான சுவடிகளில், தமிழ்ச்சுவடிகள் இருப்பதற்கான எந்த தடயமும் இல்லை. ‘தமிழ்’ என்ற குறிச்சொல்லுக்கு இந்த இணையதளத்தில் கிடைப்பதெல்லாம் சமஸ்கிருதச் சுவடிகளே.

ஏற்கனவே, பல்லாயிரம் கோடிகளில் சமஸ்கிருதத்திற்கு சாமரம் வீசிக் கொண்டிருக்கும் ஒன்றிய அரசு, இந்த திட்டத்திலும் அதையே திணித்துள்ளது. ஆகவே, இது ‘ஞான பாரதம்’ அல்ல, வெறும் ‘ஞான சமஸ்கிருதம்’.

**2. நாடு முழுக்க 45 மையங்கள் ஆனால், தமிழ்நாட்டில் ஒன்று கூட இல்லை:**

இந்த திட்டத்திற்காக நாடு முழுக்க 28 ஒருங்கிணைந்த மையங்கள் (CLUSTER CENTRES) மற்றும் 17 தனித்த மையங்கள் (INDEPENDENT CENTRES) என, மொத்தம் 45 மையங்களை ஒன்றிய அரசு அமைத்துள்ளது. இதில், பார் போற்றும் பண்பாடும், உலகின் மூத்த மொழி எனப் புகழப்படும் அன்னைத் தமிழும் கொண்ட தமிழ்நாட்டிற்கு, ஒரு மையம் கூட ஒதுக்கப்படவில்லை.

இரத்தம் கொதிக்கிறது. பீகாரில் 4 மையங்கள், உத்தரப்பிரதேசத்தில் 3 மையங்கள், குஜராத்தில் 3 மையங்கள் என ஒன்றிய அரசின் செல்ல மாநிலங்களில் பல மையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால், பல்லாயிரமாண்டு காலமாக சுவடித்தொகுப்புகளில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டிற்கு ‘0’ மையங்கள்.

ஒன்றிய அரசு எத்தனை சதித்திட்டங்கள், அதிகார வரம்புமீறல்களைச் செய்தாலும், தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் முதன்மைக் காவலராக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழைப் பத்திரமாக காத்து, எதிர்கால தலைமுறையினருக்கு கையளிப்பார். இதற்கு, அவரது ஆட்சியில் தமிழ் வளர்ச்சித்துறையும், பண்பாட்டுத்துறையும் செய்து வரும் சாதனைகளே சாட்சி!

இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரத்தில்

# ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## அமைச்சர் மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், மார்ச் 19-

நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் புதிய பேருந்து நிலையம் அருகே மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது வெளியுறவு கொள்கையில் அமெரிக்காவிற்கு அடிபணிந்து செயல்படுவதால் நாடு தற்போது கச்சா எண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் வணிகர்களுக்கு மின்சார யூனிட்டுக்கு 2 ரூபாய் மானியம் வழங்குதல், ஆவின் மூலம் பால் கொள்முதல் அதிகரித்தல் உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து நிலைமையை சீர்செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஆர்ப்பாட்டத்தில் நகர கழக செயலாளர் என்.ஆர். சங்கர், ஒன்றிய கழக செயலாளர் கே.பி.ஜெகநாதன், நகரமன்ற தலைவர் கவிதா சங்கர், பேரூர் கழக செயலாளர் சுப்பிரமணி, ரங்கசாமி, மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் ராஜேஸ்பாபு உள்ளிட்ட கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல்லில் ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் எம்.பி.-நிர்வாகிகள் பங்கேற்பு!

நாமக்கல், மார்ச் 19-

போர் காரணமாக சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை கட்டுப்படுத்த தவறிய ஒன்றிய அரசைக் கண்டித்து நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டிற்கு திட்டங்கள் வழங்காததும், சமையல் மற்றும் வணிக எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படுத்தியதையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி சார்பில் நாமக்கல்லில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாமக்கல் பி.எஸ்.என்.எல் அலுவலகம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கி பேசும்போது, ஒன்றிய பா.ஜ.க அரசின் தவறான வெளியுறவுக் கொள்கை மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததன் விளைவாக நாடு முழுவதும் சமையல் மற்றும் வணிக ரீதியான எரிவாயு சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக குற்றம்சாட்டினர். இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு அவதியுற்று வருவதுடன், சிறு மற்றும் குறு தொழில்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் மத்திய அரசையும் அதன் கூட்டணிக் கட்சிகளையும் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநகராட்சி மேயர் கலாநிதி, துணைமேர் பூபதி, நகர கழகச் செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவக்குமார், ஒன்றிய கழகச் செயலாளர் பழனிவேல் நாமக்கல் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் டாக்டர் பி.வி செந்தில் மற்றும் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி மாவட்ட நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா இரா.துரைமாணிக்கம்

**மார்ச் 19 (2025)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட அவைத்தலைவர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.

ஆவுடையார்கோவில் ஒன்றிய பெருந்தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.என்.செல்வராஜ்

**மார்ச் 19 (2021)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கும்பகோணம் நகரத்தில் கொட்டையூர் பகுதியில் இருபது ஆண்டுகள் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை நகர்மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

குடந்தை வாணி விலாச சபா செயலாளராகவும், பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**